பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 3/2020 (I)

எனது இலக்கம் : Pns/P4/W&OP/CONT-FEE/SUB-I
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.12.28

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகையினை அறவிடல் தொடர்பான தகவல்களை தனிப்பட்ட கோப்பில் சேர்த்தல்**

மேற்படி தலைப்பில் 2020.12.31 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 3/2020 ஐக்கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை, அமைச்சரவைச் செயலாளரின் இலக்கம் அமப/23/2097/605/067 மற்றும் 2023.11.20 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி கீழ்க்கண்டவாறு திருத்தப்படுகின்றது.

02. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 3/2020 இன் ஏற்பாடுகளின்படி, முந்தைய ஆண்டுகளுக்கான விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் தொடர்பான விவரங்களை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலம் 2020.12.31 ஆம் திகதியாகும்போது முடிவடைந்ததுள்ளமையினால், மற்றும் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகை அறவீடு தொடர்பான பழைய தகவல்களைத் தேடிச் செல்லும்போது அரசாங்க உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ள ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அவதானித்து 2023.01.01 ஆம் திகதி முதல் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பின்வரும் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கொண்ட நியமனத்தை வகிக்கின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரதும் தனிப்பட்ட கோப்புகளில், 2020.01.01 ஆம் திகதி முதல் ஆண்டுதோறும் மேற்படி பங்களிப்புத்தொகை அறவிடப்பட்டுள்ளமைக்கான தகவல்களை உள்ளடக்குதல் மற்றும் அவ்வாறு வருடாந்தம் தனிப்பட்ட கோப்புகளை இற்றைப்படுத்தி பராமரிப்பதற்கு ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டியிருத்தல். இதற்கு, "இணைப்பு 01" இன் படிவத்தைப் பயன்படுத்தல்.

(ஆ) இரண்டாம் நிலை அடிப்படையிலான விடுவிப்புக்களின்போது, ஓய்வூதிய உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு செலுத்த வேண்டிய 25% மற்றும் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகையினை அறவிடுதல் தொடர்பான அறிக்கைகளை தனிப்பட்ட கோப்பில் உள்ளடக்குதல்

(இ)விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து தமது சேவைக் காலத்துக்குரிய பங்களிப்புத் தொகையினை செலுத்தியிராத காலங்கள் இருப்பதாக தெரியவரும் சந்தர்ப்பங்களில் (உதாரணம் : சேவையில் முறிவு, சம்பளமற்ற சேவை காலம் முதலியன) அப் பங்களிப்புத்தொகையினை அறவிட்ட பின்னர் ஓய்வூதியத்தினை உரித்தாக்கல்.

ஒப்பம்./ கே.டி.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**இணைப்பு 01**

**"தனிப்பட்டகோப்பில் உட்சேர்ப்பதற்காக"**

<u>விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகையினை அறவிடல் தொடர்பான விவரங்கள்</u>

1. உத்தியோகத்தரது பெயர் :-
2. பதவி :-
3. சம்பளம் செலுத்தப்பட்ட காலப்பகுதி :-
4. பங்களிப்புத் தொகையினை அறவிட்ட காலப்பகுதி:-
5. பங்களிப்புத்தொகை நிலுவை காணப்படின் அது தொடர்பான தகவல்கள் :-
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றும், தற்போதைய ஏற்பாடுகளின்படி, விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையினை சரியாகச் சேகரித்து, உரிய வருமானத் தலைப்புக்கு வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

திகதி:-

.......................................................................

(தலைமை நிதி உத்தியோகத்தர் / தலைமைக் கணக்காளர் )

(உத்தியோகபூர்வ முத்திரை)

பிரதி - உத்தியோகத்தர்